# பொதுக்காலம் 27ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 27ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தி, நமக்கு வெளிப்படுத்தும் முதல் சிந்தனை, இறை நம்பிக்கை நம்மிலே என்றும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதையே. இயேசு, “கடுகளவு விசுவாசம் இருந்தால் அத்திமரம் கடலில் வேரூன்றி நிற்கும்” என்று தம் சீடர்களுக்குக் கூறுகின்றார். ஆம். “இயேசுவின் ஆடையைத் தொட்டாலே போதும், நலம் பெறுவேன்” என்ற அந்த பெரும்பாடுள்ள பெண்ணின் நம்பிக்கை நம்மில் வேண்டும். “நீர் ஒரு வார்த்தை சொல்லும், என் ஊழியன் குணமடைவான்” என்ற நூற்றுவர் தலைவனின் நம்பிக்கை நம்மிலே வேண்டும். “என்னில் நம்பிக்கை கொள்பவர் நான் செய்பவற்றை செய்வார், ஏன் அவற்றைவிடப் பெரியனவும் செய்வார்” என்று இயேசு நம்மிலே இறைநம்பிக்கை ஆழமாக வேண்டும் என்பதை நமக்கு மிகத் தெளிவாக எடுத்துரைப்பதைக் காணலாம்.

இறைநம்பிக்கையை சோதிக்கும் பல நிகழ்வுகள், சோதனைகள் நம் வாழ்வில் ஏற்படலாம். யோபுவின் வாழ்வில் அவர் சந்தித்த அனைத்து இழப்புக்களிலும் தாம் இறைவன் வைத்துள்ள நம்பிக்கையில் எள்ளளவும் தடம் புரளவில்லை. அதனால்தான் அனைத்தையும் இறைவனிடமிருந்து இருமடங்காகப் பெற்றுக் கொண்டார் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இறைவனிடம் நாம் கேட்கும்போது நம்பிக்கையோடு ஐயப்பாடின்றி கேட்க வேண்டும் என யாக்கோபு தாம் எழுதிய திருமுகத்திலே அழுத்தமாக எடுத்துரைப்பதைக் காணலாம். நாம் நம் இறைநம்பிக்கையில் பாறைமீது கட்டப்பட்ட வீட்டைப்போல உறுதியாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக நாம் பெறும் சிந்தனை, நாம் ஒருவர் ஒருவருக்குப் பணியாளராக மாற வேண்டும் என்னும் பாடத்தைப் புகட்டவில்லை. நாம் பணிவிடை பெறுவதில் கவனம் செலுத்தாமல் பணிவிடை புரிவதில் கருத்தாயிருக்க வேண்டும் என்னும் போதனையை இயேசு தருகின்றார். நாம் புரிகின்ற பணிக்காக நம்மைப் பிறர் பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது என கற்பிக்கிறார். நாம் சுதந்திரமாக அவரது பணியைச் செய்ய வேண்டும். மனிதர் தரும் பெருமையை நாம் என்றும் விரும்புதல்

கூடாது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நாம் எவ்வித எதிர்பார்ப்பின்றி, மனநிறைவோடு, கடமை உணர்வோடு செய்ய வேண்டும். அப்போதுதான் நம் வாழ்க்கை அமைதியாக இருக்கும். நாம் இறைவனுடைய புகழுக்காக செயல்படும்போது நம் வாழ்வு வளம் பெறும்.

இறைபுகழ் பெருகப் பெருக மனிதர்களின் உண்மையான நலனும் பெருகும். பாராட்டுக்காக, புகழுக்காக, நாம் எதையும் எதிர்பார்க்காமல் நமது பணிகளை, பொறுப்புடன், கடமை உணர்வோடு செய்திட, இறையாசீர் வேண்டி, இத்திருப்பலியில் நம்மை அர்ப்பணிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. கடமை தவறாத ஆண்டவரே,

எங்கள் கடமைகளை, பணிகளை நாங்கள் நேர்மையுடன் ஆற்றிடவும், அந்தப் பணிகளுக்காக எந்த பாராட்டையும் எதிர்பார்க்காத மனநிலையையும் தந்தருளும். நாங்கள் என்ன செய்தாலும் உம் நாமத்தை மகிமைப்படுத்திடவும், உம் மாட்சிமைக்காகவும் மட்டுமே என்று கடமை செய்ய அருள்தர வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிநடத்தும் ஆண்டவரே,

எங்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்திட நீர் எங்களுக்குத் தந்திட்ட காவல்தூதர்களுக்காக நன்றி கூறுகின்றோம். உம் சார்பாக எங்களுக்கு அவர்கள் துணையாக எங்கள் வாழ்வில் எல்லா நிலைகளிலும் எங்களை காத்து வருகின்றனர். தொடர்ந்து அவர்களின் பாதுகாப்பினின்று நாங்கள் விலகிடாது, அவர்களுடைய அரவணைப்பில், வழித்துணையில் எங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வலுவூட்டும் ஆண்டவரே,

எங்கள் வாழ்வில் வரும் வேதனைகள், சோதனைகள். நெருக்கடிகள் போன்ற அனைத்து நிலைகளிலும் எங்கள் நம்பிக்கையை இழந்திடாமல், விசுவாசத்தில் தளர்ந்திடாமல் வாழ்ந்திடவும், உம்மால் ஆகாதது எதுவுமில்லை என்பதிலே அசையாத, மாறாத இறைநம்பிக்கையுள்ளவர்களாக வாழ்ந்திடவும், அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. பிரிந்ததை இணைக்கும் ஆண்டவரே,

கிறிஸ்துவின் பெயரால் பல்வேறு சபைகளாக பிரிந்து வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஒன்றிணைக்கப்பட்டு, உலகெங்கும் கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்கவும், தம் தாய் திருச்சபையோடு இணைந்து, உண்மைக் கடவுளாகிய உம்மைத் தங்கள் வாழ்வில் கண்டுணரவும், ஒரே ஆயனும், ஒரே மந்தையுமாக அனைவரும் ஒன்றாய் உம் இறையரசைக் கட்டியெழுப்பிடும் பணியில் இணைந்து செய்து, உம் நாமத்தை மகிமைப்படுத்திட ஆற்றல் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. வாழ்வில் இனிமை தரும் ஆண்டவரே,

எம் பங்கு மக்கள் அனைவரும் இறையன்பிலும். பிறரன்பிலும் நாளும் வளர்ந்திடவும், உறவுகளில் உள்ள கசப்புணர்வுகள், பழிவாங்கும் மனநிலைகளை அகற்றி, ஒருவரையொருவர் மனதார மன்னித்து, ஒவ்வொரு குடும்பங்களிலும், மனங்களிலும் நீர் அளித்திடும் அமைதி, மகிழ்ச்சி, சமாதானம் நிறைவாகத் தங்கிடவும், பொருளாதாரப் பிரச்சனைகள் சீராகிடவும், தங்கள் குழந்தைகளை ஆன்மீகப் பாதையில் வழிநடத்திடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com